திருவேற்காடு நகராட்சி ஆணையர் அவர்களின் செயல்முறைகள்

முன்னிலை :- திரு.M.கணேசன்.B.Sc.,MBA

ந.க.எண். 2441/2023/எப்1 நாள் :05.03.2024

பொருள் : மனைப்பிரிவு அனுமதி – திருவேற்காடு நகராட்சி – கோலடி கிராமம் சர்வே எண்.31/1B, 31/2C, 32/2A2-ல் 9679 சதுர மீட்டர் நிலப்பரப்பில் குடியிருப்பு மனைப்பிரிவிற்கு இறுதி ஒப்புதல் வழங்கி உத்திரவிடப்படுகிறது – தொடர்பாக

பார்வை : 1. உறுப்பினர் செயலர், சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமம், சென்னை அவர்களின் கடிதம் L1/0082/2023 நாள்:18.05.2023

2. இணை II தென் சென்னை சைதாப்பேட்டை சார் பதிவாளர் அவர்கள் அலுவலகத்தில் மனுதாரர் தானமாக சாலை இடத்தினை பதிவு செய்த தான பத்திரம் எண்.1134/2023 நாள்.29.04.2023

3. நகரமன்ற தீர்மானம் எண். 581 நாள்.29.02.2024.

****

உத்தரவு :-

திருவேற்காடு நகராட்சி எல்லைக்கு உட்பட்ட கோலடி கிராமம் சர்வே எண்.31/1B, 31/2C, 32/2A2-ல் 3049 சதுர மீட்டர் நிலப்பரப்பில் குடியிருப்பு மனைப்பிரிவிற்கு ஒப்புதல் வேண்டி **M/S.KLP Estates Private Limited Rep By its Director Thiru.Aashesh Kumar Lalwani** என்பவர் உறுப்பினர் செயலர், சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமம், சென்னை அவர்களுக்கு விண்ணப்பம் சமர்ப்பிக்கப்பட்டது.

2. மேற்படி மனுதாரரின் விண்ணப்பம் உறுப்பினர் - செயலர், சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமம், சென்னை அவர்களால் பரிசீலனை செய்யப்பட்டு, பார்வை 1–ல் கண்ட கடிதத்தின்படி அத்துடன் இணைக்கப்பட்டுள்ள சாலை அமைப்பு வரைப்படத்தின்படி, சாலை இடத்தினை இணை II தென் சென்னை சார் பதிவாளர் அலுவலகத்தில் பார்வை 2 ல் கண்டபடி மனுதாரர் **M/S.KLP Estates Private Limited Rep By its Director Thiru.Aashesh Kumar Lalwani** என்பவர் பத்திர பதிவு செய்து சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமத்திற்கு தானமாக ஒப்படைத்துள்ளார். உறுப்பினர் - செயலர், சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம், சென்னை அவர்களின் 18.05.2023–ம் தேதிய உத்திரவில் மனைப்பிரிவிற்கு PPD/L.O.No.141/2023 நாள்:18.05.2023 திட்ட அனுமதி எண்.15455 என எண்ணிடப்பட்டு தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. அதனை தொடர்ந்து பார்வை 3–ல் கண்ட நகரமன்ற தீர்மானத்தின்படி மேற்கண்ட குடியிருப்பு மனைகளுக்கு மன்றம் அனுமதி அளித்து ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. மேலும், அனுமதியற்ற மனைப்பிரிவிற்கு இந்நகராட்சிக்கு செலுத்தப்பட வேண்டிய உரிய கட்டணங்கள் செலுத்தப்பட்டுள்ளது.

மனைப்பிரிவு கட்டணம்	ரூ.60000/–	0010374/20.12.2023
ஆய்வு கட்டணம்	ரூ.5000/–	0010375/20.12.2023
சுற்றுசுவர்	ரூ.30000/–	0010376/20.12.2023
காலிமனைவரி	ரூ.601702/–	0008254/12.01.2024
கொடி நாள்	ரூ.5000/–	0010377/20.12.2023
5 வருட வைப்பு தொகை	ரூ.300000/–	0010378/20.12.2023
மழைநீர் வடிகால்வாய்கள் வசதிகள்	ரூ.4600000/–	0010379/20.12.2023

3. எனவே, மேற்கண்ட இடத்தில் மனுதாரர் குடியிருப்பு மனைப்பிரிவு அமைக்க இத்துடன் இணைத்துள்ள வரைபடத்தில் இறுதி ஒப்புதல் வழங்கப்படுகிறது.

5/3/2024

ஆணையர்,
திருவேற்காடு நகராட்சி.

பெறுநர் :

M/S.KLP Estates Private Limited Rep By its Director Thiru.Aashesh Kumar Lalwani
No.1-30 Perambur Barracks Road, Pattalam, Chennai-600 012.

நகல் பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது :-

உறுப்பினர் - செயலர், சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமம், சென்னை.